**செய்தி வெளியீடு எண். 222** **நாள் . 23.04.2018**

## டி.என்.பி.எஸ்.சி. (தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்) குறித்து மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

டி.என்.பி.எஸ்.சி. தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்கள் அரசு இ-சேவை மையத்தில் ஆன்லைனில் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யலாம் என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

டி.என்.பி.எஸ்.சி தேர்வுகளில் தேர்ச்சி அடைந்தவர்கள் நேர்முக தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு போன்றவற்றிற்காக 2 அல்லது 3 முறை சென்னை டி.என்.பி.எஸ்.சி. அலுவலகத்திற்குச் செல்லும் சூழ்நிலை உள்ளது.

அதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க அனைத்து மாவட்டங்களிலும் சான்றிதழ் சரிபார்க்க ஆன்லைனில் பதிவேற்றம் செய்யும் பணி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் செயல்பட்டு வரும் அரசு இ-சேவை மையங்களில் டி.என்.பி.எஸ்.சி. தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்கள் உரிய சான்றிதழ்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முதற்கட்டமாக ஆன்லைன் மூலம் சான்றிதழ் பதிவேற்றம் சேவையை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள அரசு இ-சேவை மையத்தில் இன்று 23.04.2018 மாவட்ட ஆட்சியர் அவர்களால் துவக்கப்பட்டது.

டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகளில் தேர்ச்சி அடைந்த விண்ணப்பதாரர்கள் தங்களுடைய சான்றிதழ்களை திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகங்கள் மற்றும் 12 வட்டாட்சியர் அலுவலகங்களில் இயங்கி வரும் அரசு இ-சேவை மையங்களில் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

குருப்-2ஏ தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்கள் தங்களது அசல் சான்றிதழ்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு பக்கம் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய ரூ.5/- மட்டும் கட்டணமாக செலுத்த வேண்டும்.

எனவே, தற்போது டி.என்.பி.எஸ்.சி. குருப்-2ஏ தேர்வில் தேர்ச்சி அடைந்தவர்கள் தங்களுக்கு டி.என்.பி.எஸ்.சி. அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் தங்கள் வசம் உள்ள அனைத்து அசல் சான்றிதழ்களுடன் அரசு இ-சேவை மையத்தை அணுகி ஆன்லைனில் பதிவேற்றம் செய்யலாம். இனிவரும் மற்ற டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகளில் தேர்ச்சி அடைபவர்களும் இம்முறையே பின்பற்ற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**